**வீரகெடிய பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீரகெடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வீரகெடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 492,772 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 15,425,876 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நீதிமன்றத் தண்டப்பண வருமானம் கிடைத்தல் நிச்சமற்ற தன்மையில் காணப்படுவதனால் பெற வேண்டிய வருமானமொன்றென கணக்கீடு செய்யப்படவில்லை எனவும், முத்திரைக் கட்டண அட்டவணைகள் 2023 ஆண்டில் கிடைத்தமையால் கணக்கீடு செய்யப்படவில்லை என. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை கிடைத்திருந்த ரூபா 7,603,683 தொகைக்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் வருமானம் என கணக்கீடு செய்யப்படாமல் வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி 05 வருடங்களுக்கு குறைவான ஒரே முறையில் பெறும் பணம் வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டதென. | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது வீதி விளக்குப் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,864,295 இற்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நீண்ட காலமாக பலன்கள் எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட மூலதன தன்மையுள்ள செலவொன்றென | செலவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டமையால் மூலதனச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டது என. | |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஊழியர் கடன் பெறுமதி ரூபா 782,005 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | பெற வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது வீரகெடிய ஹெலபொஜுன் ஹலவின் அலுமினியம் தகடுகள் மற்றும் கண்ணாடிகள் பயன்படுத்தி பிரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 554,500 இற்கான செலவு மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த பஸ்மங்ஹந்திய கடையறை ஒன்றிலிருந்து பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 200,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்கீடு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன எனவும் மற்றும் பெற வேண்டிய ஒரே முறையில் பெறும் பணத்தின் ரூபா 100,000 தொகை அறவிடப்பட்டது என. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது நிரந்தரப் பதவிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் மந்திரிமார் கொடுப்பனவு மீளளிப்பு செய்யும் போது மிகையாக கிடைத்திருந்த ரூபா 58,448 தொகை செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | மீண்டும் மீளளிப்பு செய்யும் போது மிகையாக கிடைத்திருந்த தொகையை செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | | |
| i. | பிரிவு 23 மற்றும் 24 | குறிப்பிட்ட சட்டத்திற்கு இணங்க சபை பாதை தொடர்பாக விபரங்கள் அடங்கிய வீதிப் பதிவேடு ஒன்று 2023 மார்ச் 23 திகதி அளவிலும் தயாரித்திருக்கவில்லை. | முறைசார் வீதிப் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii. | பிரிவு 134(2) | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை வருடாந்தம் | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்காண்பதற்காக | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இனங்கண்டு வீதவரி அதிகாரப் பிரதேசத்தை திருத்திக்கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் 1973 ஆண்டு இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எதிர் காலத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 177(1) | வீரகெடிய ஹெலபொஜுன் ஹலவில் நாளாந்த வருமானம் சேகரிப்பதற்காக நியமனம் செய்யப்பட்ட ஊழியரினால் 11 சந்தர்ப்பங்களில் சேகரிக்கப்பட்ட ரூபா 110,544 தொகை அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் சேகரிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 நாளிற்கும் 15 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நாளாந்தம் கிடைக்கப் பெறும் வருமானத்தை சேகரித்து அந்தப் பணத்தை அலுவலகத்திற்கு அனுப்பும் கடமை 2023 ஏப்ரல் 10 திகதி முதல் வருமான மேம்பாட்டு உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 திகதி 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 02(iv) | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை நாட்கள் சம்பளம் ஆகிய வழமையான கடமை நேரங்களின் பின்னர் செலுத்தப்படும் படிகளுக்காக காலத்தை அடிப்படையாகக் கொள்ளும் போது அந்தக் காலம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஆண்டின் போது விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்தாமல் 60 நாட்களுக்காக பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 137,013 இற்கான விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | விரல் அடையாள இயந்திரம் செயற்படாமையால் எதிர்காலத்தில் புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதன்படி செயற்படுவது எனவும். | அத்தியவசியமான விடயம் ஒன்றென கணித்து விரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,592,338 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,423,227 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,284,000 | 3,857,349 | 4,348,772 | 5,519,094 | 5,299,000 | 2,936,609 | 2,234,028 | 6,010,517 |
| வாடகை | 28,371,000 | 27,392,546 | 25,761,670 | 19,290,045 | 20,612,000 | 20,485,220 | 7,973,036 | 17,659,169 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,200,000 | 2,667,535 | 2,527,305 | 563,475 | 1,160,000 | 989,050 | 544,594 | 423,244 |
| ஏனைய வரு மானங்கள் | 4,965,500 | 10,308,815 | 10,308,815 | - | - | - | - | - |
| மொத்தம் | 37,820,500 | 44,226,245 | 42,946,562 | 25,372,614 | 27,071,000 | 24,410,879 | 10,751,658 | 24,092,930 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு 2670 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 5,019,165 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 158(1) இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் ஆதனங்களை தடை செய்யும் அறிவித்தல் வழங்கி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 158(1)(ஆ) இற்கு இணங்க நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருந்த போதிலும், நிலுவை ரூபா 5,000 இற்கு மிகையான ஆதனங்கள் உரிமையாளர் 150 பேரிடம் பெற வேண்டிய வீதவரி ரூபா 1,511,993 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் செலுத்தப்படாத சிவப்பு அறிவித்தலுக்காக ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமதியில் கூடிய நிலுவைகளை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 116 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி ரூபா 360,600 தொகை மற்றும் 33 வியாபார அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய கைத்தொழில் வரி ரூபா 31,500 தொகையாக இருந்தது. | நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 1946 இன் 30 ஆம் இலக்க வாடகை மற்றும் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளல் சட்டத்தின் பிரிவு 20 இன் படி வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் 2002 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவிடப்பட்டுள்ளது. | 2018 ஆண்டின் போது புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2020 ஆண்டில் கிடைக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டிற்கு காணப்பட்ட எதிர்ப்புகள் மற்றும் கொரோனா தொற்றுநோய் நிலைமைகளின் காரணமாக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டிற்குரிய எதிர்ப்புக்களை கவனம் செலுத்த முடியாது என எழுத்துமூலம் அறிவித்திருந்த காரணத்தினால் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 19 கடைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 174,650 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய சந்தை வாடகை ரூபா 18,564,700 தொகை மற்றும் சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 550,694 தொகை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 5,937,274 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 2,591,279 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் இயந்திர வாடகை எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் மற்றும் நிலுவை வருமானம் குறிப்பிட்ட நேரத்தில் வருமானப் பரிசோதகர்கள் அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வாகனத் தரிப்பிடக் கட்டணம் ரூபா 490,475 தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 452,983 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ரூபா 129,200 அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 2.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டு முதல் 2022 வரை 502 கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் சபையினால் | எதிர்காலத்தில் இந்த சிக்கல் தன்மையான நிலைமையை தவிர்ந்து கொள்வதற்குத் | தொழிநுட்ப உத்தியோகத்தரினால் பரிசோதனை |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 50 கட்டிடங்களுக்காக மாத்திரம் இணக்கச் சான்றுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், மீதியான கட்டிடங்கள் தொடர்பாக 1978 இன் 41 ஆம் இலக்கங் கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 10 (6) இன் படி தொடர்நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | மேற்கொண்டு சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மின்சக்தி மற்றும் வலுச்சக்திச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 10 திகதிய PE/01/01 கொண்ட படிவத்திற்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தியிருக்காமையால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்புக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,633,416 தொகை மின்சார சபையில் இருந்து மீளளிப்புச் செய்திருக்கவில்லை. | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 112 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுவதுடன் அதில் ஒரு பிரிவில் மாத்திரம் வீதி விளக்கு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதுடன் இது வரை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடிதத்தின் படி நடவடிக்கை எடுத்தல் மற்றும் செலவுகளை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக சபையின் தலைமை அலுவலக கட்டிட வளாகத்தை துப்பரவு செய்யும் சேவை வெளி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்வதுடன், 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுச் செலவு ரூபா 1,584,000 தொகையாக இருந்தது. சபையின் தற்போதைய பதவியணியில் மிகை தொழிலாளர்கள் 09 பேர் காணப்பட்ட போதிலும் அவர்களை பயன்படுத்தி இந்தக் கருமத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும் வெளித்தரப்பினர் மூலம் இச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவுகளும் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஆகும். | நாளாந்த பொது விடயங்களுக்காக தொழிலாளர் தேவைப்பாடு 26 ஆக இருந்தமையால் அலுவலக வளாகத்தை நாளாந்தம் துப்பரவு செய்வதற்காக நிறுவனத்தில் காணப்படும் சுகாதார தொழிலாளர்கள் 21 பேரை ஈடுபடுத்த முடியாமல் உள்ளது. | இருக்கக் கூடிய ஊழியர்களை முகாமைத்துவப்படுத்தி சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருந்த 11 வர்த்தக நிலையங்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை. | 04 வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளது எனவும், இந்த 04 இற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் 03 இற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | வர்த்தக நிலையங்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 15 திகதி முதல் உடுகிரிவல குளத்தை சார்ந்த அன்னவள்ள சேவை செயற்திட்டம் நடாத்திச் செல்லல் சபையினால் ஆரம்பிக்கப்பட்டு தனியார் தரப்பினருக்கு வள்ளச் சேவையை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டு நாளாந்த வருமானத்தில் பத்து வீதம் சபையினால் அறவிடப்பட்டிருந்தது. எனினும் அச் செயற்திட்டத்திற்குரிய செயற்திட்ட அறிக்கைக்காக தென் மாகாண ஆளுனரின் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்காததுடன், சேவை உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு மீண்டும் ஞாபகக் கடிதம் அனுப்பபட்டது என. | செயற்திட்ட அறிக்கைக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் துணை விதிகள் ஆக்கிக் கொள்ளல் மற்றும் சேவை உடன்படிக்கை மேற்கொள்ளல் ஆகியவை நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஜுன் 27 ஆந் திகதிய திறைசேரியின் பிரதிச் செயலாளரின் இலக்கம் 05/2019 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கு இணங்க சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட மூன்று ஊழியர்களிடம் பெற வேண்டிய ரூபா 58,802 தொகைக்கான கடன் மீதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு கிடைத்து 07 வருடங்கள் மற்றும் 42 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த 05 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், 16 காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் 23 மயானங்களின் உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை இனங்கண்டு உரித்தாக்குவதற்கு மற்றும் காணி கட்டிடங்கள் மற்றும மயானங்களை உரித்தாக்குவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.14.1 தொடர்பாக 2021 ஏப்ரல் 21 திகதிய பின்இணைப்பு 38 இன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் படி ரூபா 500,000 இனை மிகைக்கும் வாகன திருத்த வேலைகள் தொடர்பாக பிரதான அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமல் கப் வண்டிக்கு 2022 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்த வேலைக்காக ரூபா 1,241,852 இற்கான செலவொன்று சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான திருத்த வேலைகளுக்காக உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |